தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

17.12.2012 P.M

18.12.2012 A.M

## டெல்டா விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும்: கருணாநிதி கோரிக்கை



விவசாய சங்கங்களின் கோரிக்கையை ஏற்று கருகிய சம்பா பயிர்களுக்கு இழப்பீடாக ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் வழங்க வேண்டும் என்று திமுக தலைவர் கருணாநிதி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து திங்கள்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனைப்படி தமிழக - கர்நாடக முதல்வர்கள் பேச்சு நடத்தியும் தமிழகத்துக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. வழக்கமாக ஜூன் 12-ம் தேதி திறக்கப்படும் மேட்டூர் அணை, இந்த ஆண்டு செப்டம்பர் 17-ல்தான் திறக்கப்பட்டது. இதனால் குறுவை சாகுபடியே இல்லாமல் பெரும் இழப்பு ஏற்பட்டது.

போதிய தண்ணீர் இல்லாததால் வழக்கமாக 24 லட்சம் ஏக்கரில் நடைபெறும் சம்பா சாகுபடி இந்த ஆண்டு சுமார் 13 லட்சம் ஏக்கரில் மட்டுமே நடந்துள்ளது. அதுவும் தண்ணீரின்றி கருக ஆரம்பித்துள்ளது.

இதனால், நகைகளை அடகு வைத்து, கடன் வாங்கி நடவு செய்த விவசாயிகள் பெரும் துயரத்தில் உள்ளனர். வேறு வழியின்றி 6 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

விவசாயிகளின் கண்ணீரை துடைப்பதற்காக 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் என சட்டப்பேரவையில் முதல்வர் அறிவித்தார்.

ஆனால், மூன்று மணி நேரம்கூட மும்முனை மின்சாரம் கிடைக்கவில்லை. இதனைக் கண்டித்து காவிரி பாசன மாவட்டங்களில் உள்ள அனைத்து விவசாய சங்கங்களின் சார்பில் டிசம்பர் 7-ம் தேதி கடையடைப்பு, சாலை மறியல் போராட்டம் நடத்தியும் தமிழக அரசு கண்டுகொள்ளவில்லை.

டிசம்பர் இறுதிக்குள் 30 டி.எம்.சி. தேவை என்று விவசாயிகள் கூறுகின்றனர். தமிழகத்துக்கு 12 டி.எம்.சி. தண்ணீர் வழங்க உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், கர்நாடக அரசு மறுத்து விட்டது.

எனவே, காவிரி பாசன மாவட்டங்களை பேரிடர் பாதித்த மாவட்டங்களாக அறிவிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கருகும் சம்பா பயிர்களுக்கு இழப்பீடாக ஏக்கருக்கு ரூ. 40 ஆயிரம் வழங்க வேண்டும். விவசாயிகளின் கடன்களை ரத்து செய்ய வேண்டும். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்தில் ஒருவருக்கு அரசு வேலை வழங்க வேண்டும் என்று விவசாய சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். இதனை தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும்.

கர்நாடக மாநிலத்தில் உள்ள அனைத்துக் கட்சி எம்.பி.க்களும் பிரதமரைச் சந்தித்து காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிடக் கூடாது என்று வலியுறுத்த இருப்பதாக செய்திகள் வந்துள்ளன. அதுபோல தமிழக அரசும் நடவடிக்கை எடுக்கத் தவறியதால், திமுக எம்.பி.க்கள் திங்கள்கிழமை பிரதமரைச் சந்தித்து, காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தியதாக கருணாநிதி தெரிவித்துள்ளார்.

## 21-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

வேலூர் ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (டிசம்பர் 21) காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் பொ. சங்கர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகளை நேரடியாகவோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் பதில் அளிப்பார்கள் எனத் தெரிவிக்கப்

பட்டுள்ளது.

## விழிப்புணர்வு கருத்தரங்கம்

திருவண்ணாமலை ரீடு பயிற்சி வளாகத்தில், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் அண்மையில் நடைபெற்றது.

இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம், சென்னை சி.பி.ராமசாமி ஐயர் பவுண்டேஷன், செங்கம் ரீடு தொண்டு நிறுவனம் இணைந்து இந் நிகழ்ச்சியை நடத்தின.

நிகழ்ச்சிக்கு, அகில இந்திய விவசாய கூட்டமைப்பின் மாநிலத் தலைவர் பண்டிட் கோகுல் தலைமை வகித்தார். தாமரை தொழிற்சங்க மாநில பொதுச் செயலர் சிவக்குமார், விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார். சமூகசேவகர் மணிசெல்வம், சித்த மருத்துவர் சுந்தரம், சூரியராஜா உள்ளிட்டோர் பேசினர்.

விடியோ படக்காட்சி மற்றும் வகுப்புகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்களுக்கு இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதில், கோடி மரம் நடவு அமைப்பின் தலைவர் குப்புசாமி, ரீடு இயக்குநர் ஏழுமலை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மானாவாரி விவசாயிகளுக்கு உடனடி நிவாரணம் வழங்கக் கோரிக்கை

கோவில்பட்டி வட்டத்துக்குள்பட்ட பகுதிகளில் உள்ள மானாவாரி விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணத் தொகையை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து கோவில்பட்டி வட்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவர் சேதுராமலிங்கம், செயலர் லெனின்குமார் ஆகியோர் விடுத்துள்ள கூட்டறிக்கை:

கோவில்பட்டி வட்டத்தில் விவசாயிகள் நிகழ் பருவத்தில் புன்செய் பயிர்களான மக்காச்சோளம், கம்பு, உளுந்து, பாசி, சூரியகாந்தி போன்றவற்றை விதைத்து, களை எடுத்து அண்மைக்காலமாக கூடுதல் கூலிகளின்படி செலவு செய்து, பருவமழையை எதிர்பார்த்த நிலையில் மழை முற்றிலுமாக ஏமாற்றிவிட்டது.

இதனால் விவசாயிகள் மிகுந்த மன வேதனையடைந்துள்ளனர். எனவே, அனைத்துத் துறையைச் சேர்ந்த அரசு அலுவலர்கள் விவசாயிகளின் இந்த நிலையை தெரிந்திருந்தும் பாதிக்கப்பட்ட விவசாயிகளை பாதுகாக்கவோ, உரிய நிவாரணம் வழங்கவோ நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை. எனவே, தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து,

கோவில்பட்டி வட்ட விவசாயிகளின் மக்காச்சோளம் உள்ளிட்ட அனைத்து பயிர்களுக்கும் நிகழ் ஆண்டுக்கு பயிர் பாதுகாப்புச் சட்டத்தை தாமதமின்றி உடனடியாக அரசு செலவிலேயே செயல்படுத்தவும், அரசு தரப்பில் உரிய நஷ்டஈடாக அந்தந்த பயிர்கள் பயிரிடப்பட்ட நில அளவுக்கு தகுந்தபடி ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15ஆயிரம் வழங்கிடவும், இப்பகுதியை வறட்சி பகுதியாக அறிவித்து விவசாய கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட நிவாரணங்களை வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஓட்டப்பிடாரம் வட்டம், எப்போதும்வென்றான் நீர்த்தேக்கத்தில் நீர் இல்லாததால் விவசாயிகள்

ஓட்டப்பிடாரம் வட்டம், எப்போதும்வென்றான் நீர்த்தேக்கத்தில் நீர் இல்லாததால் விவசாயிகள் நிம்மதியிழந்து தவிக்கின்றனர். பருவமழை பொய்த்துவிட்டதால் இதுவரை இல்லாத சோகத்தை அனுபவிப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தூத்துக்குடி மாவட்டத்தின் இரண்டாவது மிகப்பெரிய நீர்த்தேக்கம் என்ற பெருமை எப்போதும்வென்றான் நீர்த்தேக்கத்துக்கு உண்டு. இங்கு தேங்கும் நீரைக் கொண்டு ஆண்டுதோறும் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

கோவில்பட்டி அருகேயுள்ள குருமலை அடிவாரப் பகுதிகளில் பெய்யும் மழை நீரும், கயத்தாறு வடபகுதியில் பெய்யும் மழை நீரும் ஓடைகள் வழியாக வந்து இந்த நீர்த்தேக்கத்தை நிரப்பும்.

நீர்த்தேக்கத்தில் இருந்து உபரியாகத் திறக்கப்படும் தண்ணீர் காட்டுநாயக்கன்பட்டி, ஆதனூர், முள்ளூர், முத்துகுமாரபுரம், வேடநத்தம், வேப்பலோடை வழியாக கடலைச் சென்றடையும். இதற்கிடையே ஏராளமான மானாவாரிக் குளங்களும் நீரைப் பங்கிட்டுக் கொள்வதுண்டு.

இந்த ஆண்டும் நீர்த்தேக்கம் நிறைந்துவிடும் என நம்பிய விவசாயிகள், கோடை உழவு மற்றும் முன் உழவுப் பணிகளை முடித்து நாற்றங்கால் அமைத்தனர்.

ஆனால், போதிய மழையின்மையால் நீர்த்தேக்க நீரை நாற்றங்காலுக்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சுமார் 10 நாள்களுக்கு கூட போதிய நீர் கிடைக்காமல் நாற்றுகள் வாடி வருகின்றன. தொழி உழவு உள்ளிட்டப் பணிகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

பருவத்தில் பலமாக இல்லாமல் லேசாக மட்டுமே பெய்த மழையால் கரிசல் நிலத்தில் பயிரிடப்பட்ட மானாவாரிப் பயிர்களான உளுந்து, பாசிப்பயறு, கம்பு, சோளம், மக்காச்சோளம்,

எள் போன்றவை மட்டுமே தாக்குப்பிடித்து வளர்கின்றன. செம்மண் பரப்பில் பயிரிடப்பட்ட மானாவாரிப் பயிர்கள் கருகிவிட்டன.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: பருவமழை நேரத்தில் முதலிலும், கடைசியிலும் என இரண்டு முறை நீர்த்தேக்கம் நிரம்பினால்தான் ஒரு முறையாவது நெல் சாகுபடி செய்ய முடியும். ஆனால், இந்த ஆண்டைப் போன்ற நிலை, எப்போதும்வென்றான் நீர்த்தேக்கத்துக்கு வந்தது இல்லை. ஏற்கெனவே 10 அடி வரை மண் மேடாக உயர்ந்துவிட்டது. அதனை தூர்வார வேண்டும் என பல ஆண்டுகளாக கோரிக்கை விடுத்தும் பலனில்லை.

பத்தாண்டுகளுக்கு முன்பு வரை இருபோக சாகுபடி நடைபெற்று வந்த இப் பகுதிகளில், இப்போது ஒருபோக சாகுபடிக்கும் தண்ணீர் இல்லை என்பது மிகவும் வேதனையான விஷயம்.

நீர்த்தேக்கத்தில் இருந்து வயல்களுக்குத் தண்ணீர் கொண்டு செல்ல சிமென்ட் வாய்க்கால் கட்டிக் கொடுக்கப்பட்டது. அந்தப் பணியையும் சரியாகச் செய்யாததால் அவை சிதிலமடைந்துவிட்டன.

நிலத்தடி நீரைக் கொண்டு பயிர் செய்யலாம் என்றால் அதுவும் இப்போது அதலபாதாளத்துக்குச் சென்றுவிட்டது. பருவமழை காக்கத் தவறிவிட்டதால், தமிழக அரசு விவசாயிகளைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்றனர் விவசாயிகள்.

## விவசாயிகளுக்கு திறன் வளர்த்தல் பயிற்சி

புதூர் வட்டாரத்தில் உள்ள வெம்பூர் கிராமத்தில், விவசாயிகளுக்கான திறன் வளர்த்தல் பயிற்சி 2 நாள்கள் நடைபெற்றது.

வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின்கீழ் நடைபெற்ற இப் பயிற்சிக்கு வெம்பூர் உற்பத்தியாளர் குழுத் தலைவர் சண்முகையா தலைமை வகித்தார்.

கோவில்பட்டி மண் பரிசோதனை வேளாண்மை அலுவலர் மனோகரன், ஸ்காட் கே.வி.கே. வட்டார அலுவலர் சுந்தரராஜன், தூத்துக்குடி மாவட்ட அக்மார்க் ஆய்வக வேளாண்மை அலுவலர் சங்கர், கோவில்பட்டி உழவர் சந்தை நிர்வாக அலுவலர் விஜயன், புதூர் வட்டார மேலாண்மை அட்மா திட்ட அலுவலர் தனபால், உதவி வேளாண்மை அலுவலர் நீலகண்டபிள்ளை ஆகியோர் பேசினர்.

இப்பயிற்சியில் வெம்பூரைச் சேர்ந்த சுமார் 25 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக கோவில்பட்டி கோட்ட வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) பொன்னுராஜ் வரவேற்றார்.

புதூர் உதவி வேளாண்மை அலுவலர் சரவணக்குமார் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை விளாத்திகுளம் உதவி வேளாண்மை அலுவலர் சீனிவாசன் செய்திருந்தார்.

## விவசாயி தற்கொலை: நிவாரணம் கேட்டு மனைவி மனு

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் அருகே தற்கொலை செய்து கொண்ட விவசாயி குடும்பத்துக்கு நிவாரணம் வழங்கக் கோரி, அவரது மனைவி மற்றும் உறவினர்கள் மாவட்ட வருவாய் அலுவலரிடம் திங்கள்கிழமை மனு அளித்தனர்.

சங்கரன்கோவில் அருகேயுள்ள வெள்ளப்பனேரி கிராமத்தைச் சேர்ந்தவர் செந்தூர்பாண்டியன். விவசாயியான இவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மழை இல்லாததால் விவசாயத்துக்காக வாங்கிய கடனை அடைக்க முடியாமல் அவர் தற்கொலை செய்து கொண்டதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அவரது குடும்பத்திற்கு ரூ.10 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும் என வலியுறுத்தி அவரது மனைவி முத்து, மாவட்ட வருவாய் அலுவலர் உமாமகேஸ்வரியிடம் திங்கள்கிழமை மனு அளித்தார். அந்த மனு விவரம்:

எங்களுக்கு விவசாயத்தில் தொடர்ந்து நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் 4 ஏக்கரில் மக்காச்சோளம், வாழை, வெண்டை போன்றவற்றைப் பயிரிட்டோம். பயிர்களை விளைவிக்க முடியவில்லை. சரியான மழை இல்லை. கிணற்றிலும் தண்ணீர் இல்லை. எப்படியாவது மகசூல் பெற வேண்டும் என இரண்டு இடங்களில் ஆழ்துளைக் கிணறு அமைத்துப் பார்த்தோம். அதிலும் தண்ணீர் இல்லை. விவசாயத்துக்கும், ஆழ்துளைக் கிணறு அமைத்தது மற்றும் ஏற்கெனவே வாங்கிய கடன் எல்லாம் சேர்த்து ரூ.3 லட்சம் வரை வட்டி சேர்ந்துவிட்டது. இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகி எனது கணவர் தற்கொலை செய்து கொண்டார். இப்போது நாங்கள் நிர்கதியாகி நிற்கிறோம். எனவே, எங்கள் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம் நிவாரண உதவித் தொகையும், எனது மகனுக்கு அரசு வேலையும் வழங்க வேண்டும் என தெரிவித்துள்ளார். அவருடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலர் கே.ஜி. பாஸ்கரன்,

கருப்பனூத்து கிளைச் செயலர் தங்கராஜ், ஜனநாயக வாலிபர் சங்க மாநகர் மாவட்டப் பொருளாளர் ராஜேஷ் மற்றும் உறவினர்கள் வந்திருந்தனர்.

## நீர்மட்டம்:

மைசூர் கேஆர்எஸ் அணை நீர்மட்டம்:

மொத்த உயரம்: 124.80 அடி

திங்கள்கிழமை நீர்மட்டம்: 88.95 அடி

அணைக்கு நீர்வரத்து: 1,956 கன அடி

வெளியேற்றப்படும் நீர்:4,966 கன அடி.

கபினி அணை நீர்மட்டம்:

மொத்த உயரம்: 2,284 அடி (கடல்மட்ட அளவு)

திங்கள்கிழமை நீர்மட்டம்: 2258.16 அடி

அணைக்கு நீர்வரத்து: 172 கன அடி

தண்ணீர் வெளியேற்றமில்லை.

## ஈரோடு

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 46.35 அடி

ஈரோடு,பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரபடி 46.35 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 101 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 650 கன அடி நீரும், வாய்க்காலில் 2,000 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 3.62 டி.எம்.சி.

17th dec 2012 P.M

## ராசிபுரத்தில்  டிச.24-இல் பருத்தி ஏலம்

ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் ஆர்.கவுண்டம்பாளையம் பருத்தி ஏல மையத்தில் நிகழ் பருவத்திற்கான பருத்தி ஏலம் டிச.24-இல் (திங்கள்கிழமை) தொடங்குகிறது.

இதில் ஆத்தூர், தெடாவூர், ஊத்தங்கரை, பொள்ளாச்சி, தேனி, அன்னூர், அவினாசி, நாமக்கல், அருப்புகோட்டை, விருதுநகர், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து பருத்தி வாங்க அதிகளவில் வியாபாரிகள் கூடுவர். பருத்தி விவசாயிகள் இதனைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என சங்கத்தின் தனி அலுவலர் வீ.மனோண்மணி, செயலர் (பொறுப்பு) என்.மணிவண்ணன் ஆகியோர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாணியாறு அணையிலிருந்து பாசன நீர் திறப்பு

தருமபுரி மாவட்டம், வாணியாறு அணையிலிருந்து பாசனத்துக்கான தண்ணீரை உயர் கல்வித் துறை அமைச்சர் பி. பழனியப்பன் ஞாயிற்றுக்கிழமை திறந்துவிட்டார்.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், வாணியாறு அணையிலிருந்து பாசனத்துக்கு நீரைத் திறந்துவிடவேண்டும் என ஆயக்கட்டுத்தாரர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

இதை ஏற்று, வாணியாறு நீர்த்தேக்கத்திலிருந்து வலதுபுறக் கால்வாயில் வினாடிக்கு 50 கன அடி வீதமும், இடதுபுறக் கால்வாயில் வினாடிக்கு 45 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

புதிய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளுக்கு இடது மற்றும் வலது புறக்கால்வாய்களில் ஒவ்வொரு கால்வாயிலும் இரண்டு மண்டலங்களாகப் பிரித்து 51 நாள்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் வழங்கப்படும்.

பழைய ஆயக்கட்டுப் பாசனத்துக்காக வெங்கடசமுத்திரம் ஏரி நூறு சதமும், ஆலாபுரம் ஏரி 75 சதமும் உபரி நீர் சென்று நிரம்பியது போக, மீதமுள்ள ஆலாபுரம் ஏரி 25 சதமும், பறையப்பட்டி ஏரி, ஒந்தியாம்பட்டி ஏரி, தென்கரைக்கோட்டை ஏரிகளுக்கு ஒரு முறை தண்ணீர் நிரப்பவும் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் மோளையானூர், கோழிமேக்கானூர், பாப்பிரெட்டிப்பட்டி, அதிகாரப்பட்டி, அலமேலுபுரம், தாதம்பட்டி, ஆலாபுரம், மருக்காலம்பட்டி, ஓந்தியாம்பட்டி, கவுண்டம்பட்டி, புதுப்பட்டி, வெங்கடசமுத்திரம், தேவராஜபாளையம், மெனசி, பூதநத்தம், தென்கரைக்கோட்டை, ஜம்மனஹள்ளி, பறைப்பட்டி புதூர், நாச்சினாம்பட்டி, சின்னாங்குப்பம் ஆகிய இருபது கிராமங்களைச் சேர்ந்த 10,517 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் டி.ஆர்.அன்பழகன், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் வி.ஜெகநாதன், பாசனர் சங்கத் தலைவர் கே.சுப்பிரமணியன் வேளாண்மைத்

துறை இணை இயக்குநர் பெ.மனோகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கல்லூரி மாணவர்களுக்கு விலையில்லா மடிக் கணினி:

தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இரண்டாம் ஆண்டு இளங்கலை பட்டப்படிப்பு பயிலும் 1,162 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மடிக் கணினிகளை உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் என்.ஏ.அன்பரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தைலாகுளத்தில் விதை கிராமத் திட்ட பயிற்சி முகாம்



ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரத்தில் விதைக் கிராமத் திட்ட பயிற்சி தைலாகுளம் கிராமத்தில், ஸ்ரீவில்லிபுத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் கே.காளிமுத்து தலைமையில் நடைபெற்றது.

பயிற்சியைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் ஒன்றியக் குழுத் தலைவர் கே.காளிமுத்து கூறியதாவது:

வேளாண்மைத் துறையினரின் தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயிகள் செவ்வனே கடைபிடித்து உற்பத்தி இலக்கினை இரட்டிப்பாக்கிட அனைத்து விவசாயிகளும் பாடுபட வேண்டும் என்றார்.பயிற்சியின் நோக்கம் மற்றும் செயல்பாடு குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஆறுமுகம் விளக்கினார்.

விதையின் முக்கியத்துவம், விதை வகைகள், விதைப் பதிவு நடைமுறைகள் மற்றும் விதை உற்பத்தியின் பலன்கள் குறித்து விருதுநகர் விதைச் சான்று உதவி இயக்குநர் ராமமூர்த்தி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

பயிறு வகைகளின் சாகுபடி முறைகள் மற்றும் பயறுவகை மகசூலைப் பெருக்கிடுவதற்கான வழிமுறைகள் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை அலுவலர் முத்துலட்சுமி எடுத்துரைத்தார்.

வேளாண்மைத் துறையின் மானியத்திட்ட விவரங்கள் மற்றும் இடுபொருட்கள் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் துணை வேளாண்மை அலுவலர் சிவபெருமான் விளக்கினார்.

பயிற்சியில் தைலாகுளம் கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர் ரமேஷ் செய்திருந்தார்.

இன்றைய வேளாண் செய்திகள்

18.12.2012 A.M

## மரக்கன்று பராமரிக்கும் விவசாயிக்குஊக்கத்தொகை: வனத்துறை முடிவு

தஞ்சாவூர்: "பசுமையாக்குதல் திட்டத்தில், மரக்கன்றுகளை நட்டு வைத்து, மூன்று ஆண்டுகள் சிறப்பாக பராமரிக்கும் விவசாயிக்கு, ஒரு மரக்கன்றுக்கு, ஐந்து ரூபாய் வீதம் ஊக்கத்தொகை வழங்கப்படும்' என, தஞ்சை மாவட்ட வனத்துறை அறிவித்துள்ளது.உலகின் மொத்த நிலப்பரப்பில், 33 சதவீதம் வனம் இருக்க வேண்டும். இதன்மூலமே பூமியின் வெப்பத்தை குறைக்கவும், வரும் ஆபத்துகளிலிருந்து பூமியையும், மனிதர்களை காக்கவும் முடியும். சுற்றுச்சூழல் சமன்பாட்டையும் காக்க முடியும். ஆனால், நாளடைவில் ரோட்டோர மரங்களை சாலை விரிவாக்க பணிகளுக்காக பெருமளவில் வெட்டி வருகிறோம். தனி நபரும் வீடுகளில் மரம் வளர்ப்பது குறைந்து வருகிறது.இந்நிலையில், தமிழகத்தில் உயிர் பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்குதல் திட்டம், 2011-12ம் ஆண்டு துவங்கி, 2018-19ம் ஆண்டு வரை, தொடர்ந்து, எட்டு ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு நிறுவனம் உதவியுடன், 686 கோடி ரூபாயில் அமல்படுத்தப்படுகிறது.இதன்மூலம் காடுகளுக்கு வெளியேயும் இயற்கை வள ஆதாரத்தை மேம்படுத்த, வனத்துறையினர் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர். அதாவது, அரசு நிலங்களில் மட்டுமின்றி, தனியாருக்கு சொந்தமான நிலங்களிலும் மரங்களை வளர்க்க தனியாரை ஊக்குவிப்பது தான் இதன் நோக்கமாகும்.மேலும் மரத்தேவைக்காக, வனத்தை நாடி, அங்குள்ள மரங்களை அழிப்பது, இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால் பெருமளவு குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.இதுகுறித்து தஞ்சை மாவட்ட வன அலுவலர் செல்வராஜ் கூறியதாவது:தமிழகத்தில், 31 மாவட்டங்களில், ஐந்தாயிரம் கிராமங்களை தேர்ந்தெடுத்து, 10 கோடி மரக்கன்றுகளை தனியாருக்கு சொந்தமான நிலங்களில் நட வழங்கப்படும். மேட்டுநில விவசாயிகளுக்கு வனத்துறை மூலம் குடில், தேக்கு, மா, வேங்கை, சவுக்கு உள்ளிட்ட பல்வேறு வகை மரக்கன்றுகள் தரப்படும். ஒரு ஏக்கரில், 200 மரக்கன்று நடலாம். இவற்றை நட்டு, மூன்று ஆண்டுகள் சிறப்பாக வளர்த்து பராமரிக்கும் விவசாயிக்கு, மரக்கன்றுக்கு, ஐந்து ரூபாய் வீதம் ஊக்கத்தொகையை வனத்துறை அளிக்கும்.தஞ்சை மாவட்டத்தில், கும்பகோணம் தாலுக்காவில் கொத்தங்குடி, குமரக்குடி, கல்லூர் உள்ளிட்ட கிராமப்பகுதிகளிலும், பட்டுக்கோட்டை தாலுக்காவில், செருவா விடுதி, சித்துக்காடு, ஒட்டன்காடு உள்ளிட்டகிராமங்களிலும், 478 விவசாயிகளை இத்திட்டத்தில் சேர்த்து, மரக்கன்று நடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இதன்மூலம், 1.43 லட்சம் மரக்கன்று நட இலக்கு

நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மரங்களின் மூலம் கிடைக்கும் லாபத்தை விவசாயிகளே பெற்று, வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக்கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

## நெற்பயிர் கருகியதால் தற்கொலை:நிவாரணம் வழங்க தி.மு.க., கோரிக்கை

கும்பகோணம்: "சம்பா நெற்பயிர் தண்ணீர் இல்லாமல் காய்ந்து, கருகி போனதால், டெல்டா மாவட்டத்தில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பத்துக்கு, தமிழக அரசு உரிய நிவாரண உதவியை வழங்க வேண்டும்' என, கும்பகோணம் ஒன்றிய தி.மு.க., பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.கும்பகோணம் ஒன்றிய தி.மு.க., பொதுக்குழு கூட்டம் நேற்று முன்தினம் மாலை நடந்தது. கூட்டத்துக்கு அவைத்தலைவர் கணேசன் தலைமை வகித்தார். ஒன்றிய செயலாளரும், எம்.எல்.ஏ.,வுமான அன்பழகன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக முன்னாள் அமைச்சரும், தி.மு.க., உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினருமான கோ.சி.மணி பங்கேற்றார்.Zட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:கடந்த, 13ம் தேதி தி.மு.க., செயற்குழு முடிவின்படி, தமிழகத்தில் நிலவும் மின்வெட்டை கண்டித்து, கும்பகோணம் ஒன்றிய தி.மு.க., சார்பில், கும்பகோணம் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் முன் அறப்போர் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். இதில் ஒன்றியத்தில் உள்ள தி.மு.க.,வினர் திரளாக பங்கேற்கவேண்டும்.தமிழக மக்களின் வாழ்வாதாரமான குறுவை சாகுபடி பொய்த்துவிட்டது. சம்பாவும் கேள்வி குறியாகவே உள்ளது. ஆனால் அரசு இதைப்பற்றி எதுவும் கவலைப்படாமல் உள்ளது. கர்நாடகாவிடம் உரிய நீரை பெற, அனைத்து கட்சி கூட்டத்தையும் கூட்டி விவாதிக்கவில்லை. டெல்டா மாவட்டத்தில் காய்ந்து கருகி வரும், சம்பா நெற்பயிரை பார்த்து பதறிப்போன விவசாயிகள் இதுவரை, ஆறு பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.அவர்களின் குடும்பத்திற்கு அரசு சார்பில் இதுவரை ஒரு ஆறுதல் கூட சொல்லவில்லை. எனவே, தமிழக அரசு அந்த குடும்பத்தினருக்கு உரிய நிவாரண உதவியை உடன் வழங்கிட வேண்டும்.தமிழகத்தில் தொடர்ந்து, 18 மணி நேரம் மின்வெட்டு இருப்பதால், நெசவுத்தொழில், ஜவுளித்தொழில், வணிக நிறுவனங்கள், சிறு தொழில் நிறுவனங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனையில் மின்வெட்டால் பெரும் அவதியை பொதுமக்கள் சந்தித்து வருகின்றனர். மின்வெட்டால் மாணவர்கள் படிப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே தமிழகத்துக்கு உரிய மின்சாரத்தினை பெற்றுத்தர வேண்டும்.வரும் ஜனவரி, 21ம் தேதி கும்பகோணத்துக்கு பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக வரும், கட்சியின் பொருளாளர் ஸ்டாலினை சிறப்பாக வரவேற்பது என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.கூட்டத்தில் கட்சியின் ஒன்றிய நிர்வாகிகள், பஞ்சாயத்து தலைவர்கள், கிளை கழக செயலாளர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## காய்கறி விலை அதிகரிப்பு மழை இல்லாததால் பாதிப்பு

திண்டுக்கல்:மழை இல்லாததால் காய்கறிகளின் விலை குறைவதற்கான வாய்ப்பில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

காய்கறிகளின் விலையில் கடந்த சில வாரங்களாக எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

திண்டுக்கல்லில், அனைத்து காய்கறிகளும் கிலோ ரூ.15 லிருந்து ரூ.60 வரை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் கிலோ ரூ.20 க்கு விற்கப்பட்டு வந்த சாதாரண அவரை தற்போது ரூ.45 க்கும், கோழி அவரை ரூ.55க்கும் விற்கப்படுகிறது.

முருங்கை வரத்து இல்லாததால் கிலோ ரூ.50 க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருப்பூரிலிருந்து வரவழைக்கப்படும் பச்சை மிளகாய் கிலோ ரூ. 20 க்கும், மொச்சை ரூ. 50 க்கும், முள்ளங்கி ரூ. 20 க்கும், கத்திரிக்காய், வெண்டை, தக்காளி, பாவற்காய் தலா ரூ. 15 க்கும், பீன்ஸ் ரூ. 25 க்கும், பீட்ரூட் ரூ. 10 க்கும் விற்கப்படுகிறது.

மழை இல்லாததால் பெரும்பாலான காய்கறிகளின் வரத்து குறைந்துள்ளது. தேவை அதிகரித்திருப்பதால் விலை குறைவதற்கான வாய்ப்பில்லை என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## பயிர் காப்பீடு திட்டத்தில் சிக்கல் அலைக்கழிக்கப்படும் விவசாயிகள்

முதுகுளத்தூர்:விவசாய கடன்மேளாவால், பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தில், விவசாயிகள் பயன்பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

அக்டோபரில் தாலுகாதோறும், வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு கடன் வழங்க, கடன் மேளா நிகழ்ச்சி நடத்தபட்டது. நேரடி பட்டா உள்ள விவசாயிகளுக்கு மட்டும், விவசாய பணிக்காக கடன் வழங்க, வங்கிகள் முன்வந்தன. இதற்காக விண்ணப்பங்கள் பெறப்பட்டு, ஒப்புதல் ரசீதும் வழங்கபட்டது.

பருவமழை பொய்ப்பால், பாதிக்கபட்ட நெற்பயிருக்கு, பயிர் காப்பீடு திட்டத்தின் பயன்பெற, கூட்டுறவு கடன் சங்கங்களில், பட்டா, 10 (1), நிலத்திற்கான அடங்கல் உட்பட பல சான்றிதழ்களை வழங்கி, பயன்பெற விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஆனால் விவசாய கடன்மேளாவில் விண்ணப்பித்தவர்கள், பயிர் காப்பீடு திட்டத்தில் பயன்பெற முடியாது என, சான்றிதழ் வழங்க வி.ஏ.ஓ.,க்களும், பதிவு செய்ய கூட்டுறவு கடன் சங்க அதிகாரிகளும் மறுத்து வருகின்றனர்.

கடன் மேளாவில் விண்ணப்பித்தவர்களுக்கு, இதுவரையில், விவசாய கடன் வழங்க, நடவடிக்கையோ, அறிவிப்போ வெளியிடவில்லை.

இதனால் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

முதுகுளத்தூர் வருவாய்த்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: விவசாயம் செய்த இடங்கள், வி.ஏ.ஓ.,க்கள்

மூலம் முழுமையாக கணக்கிடப்பட்டுள்ளது.
விவசாய கடன்மேளாவில் விண்ணப்பித்தவர்களுக்கு, பயிர் பாதிப்பிற்கு ஏற்ப, வங்கிகளே நேரடியாக, பயிர் இன்சூரன்ஸ் தொகையை செலுத்தும்.
விவசாயிகள் பயப்பட
தேவையில்லை, என்றார்.

## **வாடும் வெங்காய செடிகளை காப்பாற்ற.... தண்ணீரை விலைக்கு வாங்கும் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே பிள்ளையார் நத்தம், பூவாணி பகுதிகளில் வாடும் நிலையிலுள்ள வெங்காய செடிகளை காப்பாற்ற, விவசாயிகள் டேங்கர் தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சி வருகின்றனர்.
ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் பருவ மழை சரி வர பெய்யவில்லை. கண்மாய்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போனது. கிணறுகளில் தண்ணீர் இருந்தாலும் மின்சார தட்டுப்பாட்டால் பயிர்கள் காய்ந்து வருகின்றன. விவசாயம் செய்ய முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். பிள்ளையார்நத்தம், மேல தொட்டியப்பட்டி, பூவாணி பகுதியில் கடந்த அக்டோபர் மாதம் பெய்த மழையை நம்பி 200 க்கும் அதிகமான ஏக்கர்களில் விவசாயிகள் வெங்காயம் நடவு செய்தனர்.
மழை தொடர்ந்து பெய்யாததால், கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்தது.
பல ஏக்கர்களில் விவசாயம் செய்த வெங்காய செடிகள் முளை வந்த நிலையிலேயே பரிதமாக காய்ந்து போனது. இந்நிலையில் ஒரு சில விவசாயிகள் வாடும் நிலையிலுள்ள வெங்காயசெடிகளை பாதுகாக்க தண்ணீரை டேங்கர்களில் விலைக்கு வாங்கி பாய்ச்சி வருகின்றனர்.
விவசாயி ராமராஜ்,"" நான்கு ஏக்கரில் வெங்காயம் நடவு செய்துள்ளேன். இதில் தண்ணீர் இல்லாமல் இரண்டு ஏக்கர் வெங்காய செடிகள் கருகின. வெங்காயத்திற்கு 10 நாளுக்கொருமுறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.
ஒரு ஏக்கர் முழுவதும் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச 6 ஆயிரம் லிட்டர் கொள்ளவுள்ள 30 டேங்கர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு டேங்கருக்கு 600 ரூபாய் கொடுத்து பாய்ச்சி வருகிறேன்," என்றார்.
விவசாயி அய்யனார்,""மழையை நம்பி ஐப்பசி மாதம் வெங்காயம் நடவு செய்தேன். பொதுவாக ஏக்கருக்கு 60 முதல் 70 மூடை வெங்காயம் கிடைக்கும்.
தண்ணீர் இல்லாததால் இந்த விளைச்சல் கிடைப்பது சந்தேகமாக உள்ளது," என்றார்.

## திருந்திய நெல் சாகுபடி பயற்சி

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூரில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்ப பயற்சியை வேளாண் உதவி இயக்குனர் டாக்டர் ஆறுமுகம் துவக்கிவைத்து பேசினார். பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர்கள் ராமலிங்கம், சூரிய சந்திர செல்வன், உதவி பேராசிரியர் ஞானசேகரன், ஏக்கருக்கு 4 ஆயிரம் கிலோ மகசூல் எடுப்பதற்காகன வழிமுறைகள் பற்றி பேசினர். லதா நன்றி தெரிவித்தார். ஏற்பாடுகளை தொழில் நுட்ப வல்லுனர்கள் பெருமாள்சாமி, தெய்வேந்திரன் செய்திருந்தனர்.

## சூரியகாந்திக்கு அதிகவிலை:ஏற்றுமதி மையம் தகவல்

கரூர்: "வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் சூரியகாந்திக்கு, அதிக விலை கிடைக்கும்' என, தமிழ்நாடு வேளாண் பல்கலை, தேசிய வேளாண் புதுமை திட்ட உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மைய இயக்குனர் அஜ்ஜன் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:சூரிய காந்தி உற்பத்தியில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது. நடப்பாண்டில், ஐந்து லட்சம் டன் சூரியகாந்தி உற்பத்தி ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது. கர்நாடகா, ஆந்திரா மற்றும் மகாராஷ்ட்ரா மாநிலங்கள் சூரியகாந்தி உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழகத்தில் கரூர், தூத்துக்குடி, திருச்சி, தர்மபுரி, விருதுநகர், திண்டுக்கல், நெல்லை, திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில், 82 சதவீத சூரியகாந்தி உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்திய எண்ணெய் பிழிவோர் சங்க ஆய்வு அறிக்கையின்படி கடந்த அக்டோபர் மாதம், 1.04 மில்லியன் டன்களும், செப்டம்பரில், 0.99 மில்லியன் டன் தாவர எண்ணெய் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டது. வரும் ஆண்டில், 7.8 மில்லியன் டன் பாமாயில், 1.20 மில்லியன் டன் சோயா எண்ணெய் மற்றும், ஒரு மில்லியன் டன் சூரியகாந்தி எண்ணெய் இறக்குமதி செய்யப்படும்' என, எதிர்பார்க்கப்படுகிறது.இதன் அடிப்படையில், வெள்ளகோவில் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில், கடந்த 12 ஆண்டுகளாக இருந்த, சூரியகாந்தி விதையின் விலைகளை ஆராயப்பட்டது. அதில், தற்போதைய பட்டத்தில் விதைக்கப்படும் சூரியகாந்திக்கு அறுவடை காலமான வரும் மார்ச், ஏப்ரலில் கிலோவுக்கு, 33 முதல், 36 ரூபாய் வரை, அதிக விலை கிடைக்கும். இந்த விலையின் அடிப்படையில் விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்கலாம்.

## பட்டு வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் ஆர்வம்

அவலூர்பேட்டை:அவலூர்பேட்டை பகுதியில் பட்டு வளர்ப்பு தொழில் செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இத் தொழில் குறித்து அரசு பட்டு வளர்ச்சித் துறை அதிகாரிகள் உரிய ஆலோசனைகள் வழங்க முன்வர வேண்டும்.மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை ஊராட்சிக்குட்பட்ட ரவணாம்பட்டு கிராமத்தில் கடந்த 12 ஆண்டுகளாக பட்டு வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.அரசு சாம்பில்

விவசாயிகளுக்காக பட்டு வளர்ப்பு மைய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. இதை தற்போது 15 விவசாயிகள் பயன்படுத்தி வருகின்றனர். தர்மபுரியில் செயல்படும் அரசு பட்டு விற்பனை நிலையத்திலிருந்து விவசாயிகள் முட்டைகளை விலைக்கு வாங்கி வருகின்றனர். இந்த முட்டைகளை கருப்பு பெட்டியில் வைத்து, அவரவர் வீட்டில் 10 நாள் வரை காக்க வேண்டும். பின்னர் இதிலிருந்து புழு வெளியேறும், முதல் தோல் உரியை முதலாம் பருவம் என தொடர்ந்து 4 பருவங்கள் உள்ளன.

இதில் 4ம் பருவத்தில் புழுக்களுக்கு மல்பரி தழையை தீனியாக தருகின்றனர்.பிறகு இதற்கு தீனி வழங்கமாட்டார்கள். பின்னர் மூங்கில் தட்டி, நெற்றிக்காய் (வலை) ஆகியவற்றில் விடப்பட்ட புழுக்கள், 3 நாள் வரையில் நூல் பின்னும்.இதன் பிறகு இந்த நூலை விவசாயிகள் தர்மபுரியில் உள்ள பட்டு மையத்திற்கு கொண்டு சென்று விற்பனை செய்கின்றனர். இத்தொழில் சாதாரணமாக எப்போதும் வழக்கமாக செய்து வரலாம்.முக்கியமாக இதற்கு மல்பரி தழை உற்பத்தியும், அதற்கேற்ற இடம் மற்றும் உடல் உழைப்பும் அவசிய தேவையாக உள்ளது. மஞ்சள் கூடு பட்டின் விலை கிலோவுக்கு 200 ரூபாயிலிருந்து 250 ஆகவும், வெள்ளை கூடு பட்டின் விலை 300 ரூபாயிலிருந்து 350 ஆகவும் விலை போகிறது.
சிறந்த பலன் தரும் இத்தொழிலை அதிகளவு விவசாயிகள் செய்வதற்கு பட்டு வளர்ப்பு துறை மூலம் ஊக்கம் தரும் வகையில் ஆலோசனை வழங்கிட வேண்டும்.
பட்டுவளர்ச்சித் துறை சார்பில் பயிற்சியையும், புதிய தொழில்நுட்ப யுக்திகளையும் வழங்கிட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இதே போல் குந்தலம்பட்டில் கட்டி முடிக்கப்பட்டு, செயல்பாடற்றுள்ள பட்டு மைய வளர்ப்பு கட்டடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.பஸ் வசதி தேவைஅவலூர்பேட்டை பகுதியிலிருக்கும் பட்டு விவசாயிகள் தர்மபுரிக்கு சென்று வருவதற்கு உரிய பஸ் வசதி இல்லாததால் சிரமப்படு கின்றனர். அரசு சார்பில் பஸ் வசதி செய்திட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## கோலியாஸ் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் சொட்டு நீர் பாசனம் மூலம் கோலியாஸ் மருந்து செடி பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
சின்னசேலம் பகுதிகளில் கரும்பு, மரவள்ளி, பருத்தி, மக்காசோளம் உள்ளிட்டவைகள் பயிர் செய்யப்பட்டு வருகிறது. ஆட்கள் கிடைக்காதது, தண்ணீர் பிரச்னை, போதுமான லாபம் இல்லாதது என பல்வேறு காரணங்களால் மாற்றுப்பயிரான மருந்து தயாரிக்க பயன்படும் கோலியாஸ் செடிகளை பயிர் செய்வதில் இப்பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.குறைந்ததண்ணீர், களை எடுக்க ஆட்கள் தேவையில்லை, வறட்சி, மழை

இரண்டையும் தாங்கக்கூடியது, அதிக லாபம் உள்ளிட்ட காரணங்களால் சொட்டு நீர் பாசனத்தை பயன்படுத்தி சின்னசேலம் பகுதிகளில் கோலியாஸ் செடி பயிர் செய்யப்பட்டு வருகிறது.

## மக்காசோளம் வரத்து அதிகரிப்பு

சின்னசேலம்:சின்னசேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு நேற்று மக்காசோளம் வரத்து அதிகரித்தது.சின்னசேலம் பகுதியில் தற்போது மக்காசோளம் அறுவடை செய்யப்பட்டு வருகிறது. நேற்று சின்னசேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு சேலம், விழுப்புரம், பெரம்பலூர், கடலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து 1,500 மூட்டைகள் மக்காசோளம் விற்பனைக் கொண்டு வரப்பட்டது.மேலும் தொடர்ந்து வரத்து இருந்ததால் வெளியே வளாகத்தில் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டது. நேற்று அதிகபட்சம் ஒரு மூட்டை ரூ.1,439க்கும், குறைந்தபட்சம் 1,319க்கும் விலை போனது.

## பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்காததால்சின்னசேலம் நெல் வயல்கள் வறண்டது

சின்னசேலம்:சின்னசேலம் பகுதிகளில் பாசனத்திற்கு தண்ணீர் இல்லாமல் நெல் வயல்கள் வறண்டு போனதால் விவசாயிகள் கண்ணீர் வடிக்கின்றனர்.சின்னசேலம் தாலுகாவில் 85 கிராமங்கள் உள் ளன. விவசாயத்தையே நம்பி இப்பகுதியில் பிழைப்பு நடத்தி வருகின்றனர்.இந்தாண்டு பருவ மழை பொய்த்துபோனதால் விவசாயிகள் கிணற்று நீரை பயன்படுத்தி 1,000க்கும் மேற்பட்ட ஏக்கரில் நெல்பயிர் சாகுபடி செய்தனர்.நெல் பயிர் நடவு செய்து ஒரு மாதம் முடிவடைந்துள்ள நிலையில், தொடர்ந்து மழை இல்லாததால் பெரும்பாலான கிணற்றில் தண்ணீர் வற்றி விட்டது.விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் தவித்து வருகின்றனர். தண்ணீர் இல்லாமல் நெல் வயல்கள் வறண்டு வெடிப்புவிட துவங்கிவிட்டது. ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் முதல் 10 ஆயிரம் வரை செலவு செய்துள்ள விவசாயிகள், நெற்பயிர் கருகுவதால் கண்ணீர் வடிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## விழுப்புரத்தில் 21ம் தேதிவிவசாயிகள் குறைதீர்ப்பு

விழுப்புரம்:விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 21ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் நடக்கிறது.விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 21ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் நடக்கிறது. இதில் விவசாயிகள் மற்றும் சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டு, விவசாயம் சார்ந்த பிரச்னைகளை மனுவாக வழங்கி பயனடையலாம்.இத்தகவலை கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## அவலூர்பேட்டையில் கழுதை பால் விற்பனை

அவலூர்பேட்டை:அவலூர்பேட்டை பகுதியில் கழுதைப்பால் விற்பனை செய்யப்பட்டது.சிறு குழந்தைகளுக்கு நல்ல குரல் ஆற்றல் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி பெறுவதற்காக மருத்துவ

குணமிக்க கழுதைப் பாலை வழங்குவது வழக்கமாக இருந்தது.பெரும்பாலும் சலவை தொழிலாளிகள் பொதி சுமப்பதற்காக கழுதைகள் வளர்த்து வந்தனர். காலப்போக்கில் கழுதைகள் வளர்ப்பு குறைந்துவிட்டது.சேலம், திட்டக்குடி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 20 க்கும் மேற்பட்டவர்கள் குடும்பத்துடன் கழுதைகளை கால்நடையாக கிராமப்பகுதிகளுக்கு ஓட்டி சென்று பாலை விற்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.இவர்கள், திருவண்ணாமலையிலிருந்து அவலூர்பேட்டை, தாயனூர் உள்ளிட்ட பல கிராமங்களில் 20 கழுதைகளை பால் விற்பனைக்காக கொண்டு வந்தனர்.ஒரு பாலாடை பால் 50 ரூபாய் என விற்பனை செய்தனர். தங்களது வீடுகளின் எதிராகவே பால் கிடைப்பதால் , கிராம மக்கள் குழந்தைகளின் நலன் கருதி கழுதை பாலை ஆர்வத்துடன் வாங்கினர்.

## பண்ணை பள்ளியில் விவசாயிகளுக்கு பயிற்சி

அவலூர்பேட்டை:வளத்தியில் அட்மா திட்டத்தின் சார்பில் பண்ணை பள்ளியில் வேர்கடலை பயிருக்கான பயிற்சி துவங்கியது.மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தியில் அட்மா திட்டத்தின் சார்பில் பண்ணைபள்ளி, வேர்கடலை பயிருக்கான பயிற்சி நடந்தது.அட்மா திட்ட விவசாயிகள் ஆலோ சனை குழு தலைவர் காசிநாதன் தலைமை தாங்கினார். வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு, சிறப்புரை நிகழ்த்தினார்.இப்பயிற்சியில் வேர்கடலை சாகுபடியில் அமோக விளைச்சல் பெறவும், மண் மாதிரியின் அவசியம், ஊடுபயிரின் முக்கியத்துவம், பயிர் பாதுகாப்பில் அதிக செலவை குறைப்பதற்கும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு செயல் முறையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டது.இதில் வேளாண் அலுவலர் முருகன், மைக்கேல், அருள்பாபு, மோகன்ராஜ், உதவி வேளாண் அலுவலர்கள் தமிழ்மணி, ரகுபதி, கிருஷ்ணமூர்த்தி, இளவரசி மற்றும் வளத்தியை சேர்ந்த 25 விவசாயிகள் (மகளிர்) கலந்து கொண்டனர்.

## திருந்திய நெல் சாகுபடி வேளாண் அதிகாரி ஆய்வு

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் திருந்திய நெல் சாகுபடி வயல்களை வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.சங்கராபுரம் அருகே சோழம்பட்டு, நெடுமானூர், செல்லம்பட்டு, வடபொன்பரப்பி, வடகீரனூர், மேல்சிறுவளூர், குளத்தூர் ஆகிய பகுதிகளில் அதிக அளவில் திருந்திய நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவற்றை வேளாண்மை உதவி இயக்குனர் ராமசாமி, வேளாண்மை அலுவலர் விஜயகுமார் ஆகியோர் பார்வையிட்டு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கினர்.ஆத்மா திட்ட வல்லுனர் தியாகநாதன், வளர்ச்சி அலுவலர் சதீஷ் மன்னன் உடனிருந்தனர்.

## மஞ்சள் சாகுபடியில் நவீன தொழில்நுட்பம்

நாமக்கல்: நாமக்கல் அடுத்த செவிந்திப்பட்டியில், நபார்டு பசுமை உழவர் மன்றம் சார்பில், மஞ்சளில் நவீன தொழில் நுட்பம் குறித்து பயிற்சி முகாம் நடந்தது. எருமப்பட்டி வட்டார

தோட்டக்கலை கள அலுவலர் ராஜாமணி தலைமை வகித்தார். ஹீல்ஸ் தொண்டு நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் பிரபாகரன் வரவேற்றார்.மஞ்சளில், நவீன தொழில் நுட்பம், மண் வகைகள், தட்பவெட்பநிலை, பருவம், பயிர் இடைவெளிகள், விதையளவு, விதைக் கிழங்கின் தன்மை, நடவு வயல், மேட்டுப்பாத்தி முறை, நடவு முறை, மஞ்சள் ÷சமித்து வைக்கும் முறை, மஞ்சள் சாகுபடியில் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானியத்திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது.மேலும், இயற்கை முறையில், மஞ்சள் சாகுபடி செய்யும் முறை பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. பயிற்சி முகாமில், 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்றனர். முன்னோடி விவசாயி பழனிமுத்து, பசுமை உழவர் மன்ற தலைவர் பிச்சைமுத்து, நிர்வாகி சுப்ரமணியன், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## ரூ.15 லட்சத்துக்கு நிலக்கடலை வர்த்தகம்

அவிநாசி : சேவூரில் நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு வரத்து அதிகரித்திருந்தது.
சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு இந்த வாரம் 1,500 மூட்டைகள் வரத்தாக இருந்தன. இது, கடந்த வாரத்தைவிட 400 மூட்டை அதிகம். விலையிலும் உயர்வு காணப்பட்டது. ஆனால், பச்சை ரகத்தின் விலை குறைந்து விட்டது. இந்த வார ஏலத்தில், அனைத்து நிலக்கடலை (காய்ந்தது) ரகங்களின் விலை (குவிண்டாலுக்கு) வருமாறு:
முதல் ரகம் ரூ.5,690 முதல் 5,820 வரை, இரண்டாம் ரகம் ரூ.5,300 முதல் 5,550 வரை, மூன்றாம் ரகம் ரூ.4,680 முதல் 4,980 வரை மற்றும் பச்சை ரகம் ரூ.3,100. ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) மகேந்திரசிங் கூறுகையில், ""வரத்து அதிகரிப்பால், விலையும் அதிகரித்துள்ளது. முதல் ரகம் குவிண்டாலுக்கு ரூ.180 வரை உயர்ந்தது. 210 விவசாயிகள், 12 வியாபாரிகள் பங்கேற்றனர்; ரூ.15 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது," என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

17.12.2012 P.M

18.12.2012 A.M

## பயிர் காப்பீடு விண்ணப்பம் பெற மறுப்பு கீரப்பாளையத்தில் விவசாயிகள் மறியல்

புவனகிரி, : பயிர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை வாங்காததை கண்டித்து, கீரப்பாளையத்தில் விவசாயிகள் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் வேளாண்மைத்துறை அலுவலகத்தையும் முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் தமிழக அரசு அறிவித்த இலவச பயிர் காப்பீட்டு திட்டத்திற்கான விண்ணப்பங்களை அளித்து உள்ளனர். இந்நிலையில் இதுவரை மனுக்களை வழங்காத 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், நேற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எடுத்து கொண்டு கீரப்பாளையம் வட்டார வேளாண்மை அலுவலகத்திற்கு வந்தனர். ஆனால் நேற்று மதியம் வரை அவர்களிடமிருந்து விண்ணப்பங்களை பெறவில்லை.

இதனால் ஆத்திரமடைந்த விவசாயிகள் சுமார் 100க்கும் மேற்பட்டோர் கீரப்பாளையத்தில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் சிதம்பரம் - புவனகிரி சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தகவல் அறிந்த புவனகிரி போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களை கலைந்து போக செய்தனர். பின்னர் விவசாயிகள் வேளாண்மைத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

வேளாண்மைத்துறை அதிகாரிகள் மற்றும் விவசாயிகளுடன் போலீசார் பேச்சு வார்த்தை நடத்தினர்.

அப்போது, ஒன்றியத்தில் உள்ள அந்தந்த கூட்டுறவு வங்கிகளில் நாளை சென்று விண்ணப்பங்களை வழங்கலாம் என கூறியதை அடுத்து விவசாயிகள் கலைந்து சென்றனர்.

## தென்னையில் ஊடுபயிராக கோகோ சாகுபடி செய்யலாம்

பள்ளிபாளையம், : தென்னையில் ஊடு பயிராக கோகோ சாகுபடி செய்வதற்கு தோட்டக்கலைத்துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை தொடர்பு கொள்ளலாம்.

பள்ளிபாளையம் வட்டாரத்தில் தென்னை சாகுபடி செய்துள்ள நிலத்தில் இந்த ஆண்டு புதிய ஊடுபயிராக கோகோ சாகுபடியை தோட்டக்கலைத்துறை அறிமுகம் செய்துள்ளது. விழுப்புரம், கடலூர், ராமநாதபுரம் போன்ற பகுதிகளில் பயிரிடப்பட்டு வரும் கோகோ பயிர் தற்போது நாமக்கல் மாவட்டத்தில் சேந்தமங்கலம், கொல்லிமலை ஆகிய இடங்களில் பயிரிடப்படுகிறது. முதல் முறையாக இந்த ஆண்டு பள்ளிபாளையம் வட்டாரத்தில் 10 எக்டேரில் பயிரிட திட்டமிடப்பட்டு, 5 எக்டேரில் சாகுபடி துவங்கியுள்ளது.

மேலும் ஐந்து எக்டேரில் பயிரிட தோட்டக்கலைத் துறையினர் முயற்சி எடுத்து வருவதாக பள்ளிபாளையம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

வளர்ந்த தென்னை மரங்களின் இடையே ஊடுபயிராக கோகோ பயிரிடப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 500 கோகோ செடிகள் வரை வைக்கலாம்.

இதற்கான நாற்றுகளை தோட்டக்கலைத்துறையினர் ஒரு ஏக்கருக்கு செடி ஒன்றுக்கு ரூ4.50 வீதம் ரூ2250ம், நிலத்தை தயார் படுத்தும் உழவு பணிக்காக ரூ2500ம், உரச்செலவுக்கு ரூ5 ஆயிரம் மற்றும் பயிர் பாதுகாப்புக்கு ரூ2250 என அரசு மானியம் வழங்கப்படுகிறது.

சாகுபடி செய்த 3 ஆண்டுகளில் விளைச்சலுக்கு வரும் இந்த கோகோ சாகுபடியால் ஒரு ஏக்கரில் சுமார் 500 முதல் 600 கிலோ கோகோ விதைகள் கிடைக்கும். ஒரு கிலோ கோகோ விதைகள் ரூ165க்கு விற்கப்படுகிறது. இதனால் தென்னை விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கூடுதல் வருவாய் கிடைக்கும்.

எனவே கோகோ சாகுபடி தொழில் நுட்பம் குறித்து தகவல் தேவைப்படும் தென்னை விவசாயிகள் பள்ளிபாளையம் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

## தோட்டங்களில் கம்பளி பூச்சி விவசாயிகள், தொழிலாளர்கள் பாதிப்பு

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் காய்கறி தோட்டங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள், விவசாயிகள் ஒரு வித கம்பளி பூச்சியால் அரிப்பு நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில் தற்போது பனியின் தாக்கம் அதிகரித்து வருவதால் அனைத்து தரப்பு

மக்களும் வெகுவாக பாதித்துள்ளனர். இக்காலகட்டத்தில் தேயிலை மற்றும் மலைத் தோட்ட காய்கறி விவசாயமும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதால் விவசாயிகளும் கவலைக்குள்ளா கியுள்ளனர். இதனிடையே ஆண்டு தோறும் டிசம்பர் முதல் ஜனவரி மாதம் வரை கம்பளி பூச்சி தாக்குதல் அதிகளவில் உள்ளதால் தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்கள், விவசாயிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். கொய்யா, சீத்தா, பீச் பழம் மரங்கள் மட்டுமல்லாமல் தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக நடவு செய்யப்பட்டுள்ள சில்வர் ஓக் மரங்களிலும் கொத்து கொத்தாக தொங்கியவாறு உள்ளது. இந்த பூச்சிகள் பசுந்தேயிலைகளை சாப்பிடுவதால் மகசூல் குறைவதுடன் இந்த தேயிலையை அறுவடை செய்யும் விவசாயிகளுக்கும் ஒரு வித அரிப்பு நோய் ஏற்படுகிறது. இதன் ரோமங்கள் உடலில் பட்டவுடன் அலர்ஜி ஏற்பட்டு தடிப்பாக மாறி விடுவதுடன் தொடர்ந்து நமைச்சலும் ஏற்படுகிறது. சில நேரங்களில் இந்த ரோமங்கள் கண்களில் படுவதால் பெரும்பாலான தொழிலாளர்களுக்கு பார்வை பறிபோகியுள்ளது.

குளிர்காலங்களில் இப்பூச்சியின் தாக்குதல் அதிகரிப்பதால் அனைத்து தரப்பினரும் பாதிப்படைந்து வருகின்றனர். இதனை கட்டுப்படுத்த சிறு தேயிலை விவசாயிகள், தேயிலை எஸ்டேட் நிர்வாகங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

## 50 சதவீத மானியத்தில் கறவை பசுக்கள், எருமை மாடுகளுக்கு காப்பீடு திட்டம்

தர்மபுரி, : கறவை பசுக்கள், எருமை மாடுகளுக்கு 50 சதவீத மானியத்தில் காப்பீடு பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகளின் வாழ்வாதாரம் கால்நடைகளே ஆகும். கறவை மாடுகளின் மூலம் பெறப்படும் பால் தான் பல குடும்பங்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கலப்பின கறவை பசுக்கள், எருமை மாடுகள் திடீரென உடல் நலக்குறைவால் உயிரிழப்பு ஏற்படும் போது அந்த விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. இதனால் கால்நடை வளர்ப்போரின் ஆதாரத்தை பாதுகாக்கவும், கறவை பசு, எருமைமாடு உயிரிழக்கும் போது அதை ஈடுசெய்யும் பொருட்டும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை மூலம் கால்நடை காப்பீடு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டம் தர்மபுரி மாவட்டத்தில் நியூ இந்தியா இன்சூரன்ஸ், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ், நேஷனல் இன்சூரன்ஸ் ஆகிய நிறுவனங்களில் அரசு மானியமாக 50 சதவீதம் மற்றும் பயனாளிகள் பங்கு தொகையாக 50 சதவீதம் செலுத்தி¢ விவசாயிகள் தங்களிடம் உள்ள கறவை பசுக்கள் அல்லது எருமை மாடுகளை காப்பீடு செய்து கொள்ள லாம். காப்பீடு காலம் ஒரு

வருடம் அல்லது 3 வருடம் என கணக்கிடப்பட்டு கால்நடை வளர்ப்போர் தேவைக்கேற்ப பிரீமியம் செலுத்திக்கொள்ளலாம். கால்நடை காப்பீடு திட்டம் தர்மபுரி மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மற்றும் தர்மபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர் இணையம் மூலம் செயல்படுத்தப்படுகிறது. எனவே கால்நடை வளர்ப்போர் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை, மருந்தகங்கள், கால்நடை கிளை நிலையங்கள் மற்றும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை அணுகி கால்நடைகளை காப்பீடு செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்

## தென்னை விவசாயிகளுக்கு வேண்டுகோள் வேளாண் விற்பனைக் கூடங்களில் கொப்பரையை வைக்கலாம்

கோவை, : அறுவடை செய்த கொப்பரையை பாதுகாப்பாக விற்பனைக்கூடங்களில் வைக்கலாம் என மாநில வேளாண் விற்பனை வாரிய வேளாண்மை உதவி இயக்குநர் தென்னை விவசாயிகளுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கோவை தமிழக மாநில வேளாண்மை விற்பனை வாரிய வேளாண்மை உதவி இயக்குநர் அல்தாப் கூறியிருப்பதாவது: தென்னை சாகுபடி செய்யும் விவசாயிகள் நல்ல தரமான கொப்பரை கிடைக்க அறுவடைக்கு பின் செய் நேர்த்தி செய்திடல் வேண்டும். தேங்காய்கள் நன்கு முற்றி பறித்த பின் ஹைபிரிட் ரக வகைகளுக்கு 45 முதல் 60 நாட்களுக்குள்ளும், நாட்டு ரகங்களுக்கும் 45 முதல் 70 நாட்களுக்குள்ளும் உலர வைத்து பின் அதை உடைத்து வெயிலில் காய வைக்க வேண்டும். முதலில் மண்களத்தில் சுமார் 3 நாட்களும், பின் கடப்பா கல்லில் சுமார் 4 முதல் 7 நாட்களும் காய வைக்க வேண்டும். கொப்பரை ஈரப்பதம் 6 சதவீதத்திற்குள் இருக்க வேண்டும். தேங்காய் பருப்பில் சுருக்கம் மற்றும் மடிப்பு 10 சதவீதம் மேல் இருக்க வேண்டும். பூஞ்சாண தாக்குதல், கருப்பு, மஞ்சள் நிறமானவைகளை கழிவு செய்திட வேண்டும்.

நன்கு உலர்ந்த பின் பருப்பில் படிந்துள்ள மணல், தூசி, சருகுகள் ஆகியவற்றை நீக்க வேண்டும். தேங்காய் பருப்பு நன்று வெள்ளையாக இருக்க வேண்டும். உட்புறம் சவ்வுத்தாள் பொருத்திய சாக்கு பைகளில் சேமித்து, ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நவீன முறைப்படி, பாதுகாப்புடன் வைத்து பயனடையலாம்.

இவ்வாறு அல்தாப் கூறியுள்ளார்.

## குன்னூர் ஏலத்தில் டீத்தூள் விலை ரூ.2 உயர்வு



குன்னூர் : குன்னூர் தனியார் ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 50வது ஏலம், 2 நாட்கள் நடந்தது. இதில் மொத்தம் 14.21 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்றதால் 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானதுடன், அனைத்து ரகத்திற்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 வரை விலை உயர்ந்தது.

சாதாரண வகை தேயிலை தூள் கிலோ ஒன்றுக்கு ரூ.81 முதல் ரூ.84 வரையிலும், உயர்வகை ரூ.85 முதல் ரூ.88 வரையிலும் டஸ்ட் ரகம் ரூ.105 முதல் ரூ.144வரையிலும் உயர்வகை ரூ.106 முதல் ரூ.146 வரையும் விலை உயர்ந்தது. சிடிசி டஸ்ட் ரகத்திற்கு அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ.163ம், ஆக்டோ டச் ரகத்திற்கு ரூ.226ம், விலை கிடைத்தது. அடுத்த ஏலம் 20, 21ம் தேதிகளில் நடைபெறும்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 12 காசு உயர்ந்தது



நாமக்கல் : நாமக்கல் மண்டலத்தில் ஒரு முட்டையின் கொள்முதல் விலை 12 காசு உயர்ந்து 322 காசாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக் குழு கூட்டம் நடைபெற்றது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். ஒரு முட்டையின் பண்ணை கொள்முதல் விலையை 12 காசு உயர்த்த முடிவு செய்யப்பட்டது.

இதன்படி, முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 322 காசாக நிர்ணயிக்கப்பட்டது. கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு பண்டிகையையொட்டி முட்டை தேவை அதிகரித்துள்ளதால் விலை உயர்த்தப்பட்டுள்ளது என்று பண்ணையாளர்கள் கூறினர். இதே போல் ஒரு கிலோ முட்டைக் கோழி ரூ.40 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ரூ.60 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.